I once again appeal to the hon. Members who are taking so much interest to think about this matter, formulate specific schemes and send them to Government and they will certainly examine them.''

SRI P. G. MANICKAM :—" சென்னை மாகாணத்தில் அநேக இடங்களில் ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு சொசைடிகள் இருக்கின்றன. அந்த சொசைடிகளை இண்டஸ்ட்ரியல் சொசைடியின் கீழ் மாற்றி அதன் மூலம் ஹரிஜனங்களுக்கு தொழில் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' அவருடைய யோசனைகளையெல்லாம் கவனிக்கிறேன். ஆனால் எல்லா குடிசைத் தொழில்களையும் கூட்டுறவு சொசைடிகள் மூலமாகத்தான் நடத்த வேண்டும் என்பது அவசியம் இல்லை."

SRI S. THINAKARASAMI THEVAR :—" இம்மாதிரியான கைத்தொழில்கள் கள்ளர் சீர்திருத்த இலாகாவால் பல வருஷங்களாக நடத்தப்பட்டு வந்து இப்பொழுது திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டன. திரும்பவும் சிறு கைத்தொழில்களை அதே இலாகாவின் மேல்பார்வையில் கூட்டுறவு சொசைடி மூலமாக ஆரம்பித்து நடத்த சர்க்கார் முன் வருமா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' சிறு கைத் தொழில்கள் வெற்றி அடையவில்லை. அதற்குக் காரணம் என்ன, அவைகள் வெற்றிகரமாக நடைபெற என்ன வழி என்பதை யெல்லாம் யோசிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை யெல்லாம் யோசித்து, புனராலோசனை செய்து அவைகளை மீண்டும் எப்படி அமைக்கலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்."

MR. SPEAKER :—'' I have got only 15 minutes more and I have to finish the rest of the questions within that time."

Harijan hostels

* 1627 *Q.*—SRI S. VADIVELU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of Harijan hostels in the State at present; and

(*b*) how many of them are run by the Government?

THE HON. SRI B. PARAMESWARAN :—'' (*a*) Two hundred and thirty-three hostels.

'' (*b*) Twenty-three are Government hostels."

SRI S. RAMALINGAM :—" சுமார் 210 ஆஸ்டல்கள் தனிப் பட்டவர்களால் நடத்தப்பட்டன. பல ஆஸ்டல்கள் ஒழுங்கான முறையில் நடக்கவில்லை என்று சர்க்காருக்கு அங்கத்தினர்கள் பல முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆஸ்டல் நடை முறைகளை விசாரணை செய்வதற்கும், ஆஸ்டல்களுக்குக் கொடுக்கப்படும் பணம் போதுமா, அங்கு மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு போஷாக்கு உள்ளதாக இருக்கிறதா, அவர்களுக்கு உணவு சரியாக கொடுக்கப்படுகிறதா என்பதை விசாரணை செய்யவும் ஒரு கமிட்டியை ஏற்படுத்துவார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—'' இதைப் பற்றி நான் என்னுடைய பட்ஜெட் பேச்சில் சொல்லியிருக்கிறேன். எங்கு குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்கவும், அவற்றை நிவர்த்தி

26th March 1955]

செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்வதற்கும் ஒரு தனி ஆபீசரைப் போடுவதாக உத்தேசம். ஏற்கெனவே ஆஸ்டல்களுக்கு ஒரு கமிட்டி இருக்கிறது. சில ஆஸ்டல்களில் அந்தக் கமிட்டி சரிவர வேலை செய்வதில்லை. அதனுல் தான் ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போடுவதென்று சர்க்கார் உத்தேசித்திருக்கிறது."

SRI A. SAMBASIVAM :—"எங்கெங்கே ஹைஸ்கூல் ஆஸ்டல்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஹரிஜன ஆஸ்டல் என்று இல்லாதபடி, ஹைஸ்கூல் ஆஸ்டல்களில் ஹரிஜன மாணவர்களையும் சேர்த்துவிட்டால் ஹரிஜனங்களுக்குத் தனியாக வாழ்கின்ற மனப்பான்மை போய்விடு மென்று தோன்றுகிறது. ஆகவே ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும், ஆஸ்டல்களை அமைக்கும்போது ஹரிஜனங்களுக்கு என்று தனியாக ஒதுக்காமல் மற்ற ஆஸ்டல்களுடன் சேர்த்து விடுவது நல்லது என்பதை அரசாங்கம் யோசித்து இதைச் செய்வார்களா என்பதைக் கேட்கிறேன்."

MR. SPEAKER :—"இந்தக் கேள்வியைப் போல் பல தடவைகள் கேட்டு விட்டார்கள்."

THE HON. SRI B. PARAMESWARAN :—"இப்பொழுது நடைமுறையில் சில இடங்களில் அப்படித் தான் செய்து கொண்டு வருகிறோம். அங்கத்தினர் கூறிய யோசனையையும் பரிசீலனை செய்து பார்க்கிறோம்."

SRI M. P. SUBRAMANYAM :—"ஒரு ஹரிஜன விடுதியில் ஒரு மாணவனுக்கு ரூ. 13-ம், சிலவற்றில் ஒரு மாணவனுக்கு ரூ. 13 முதல் 18 வரையிலும் கொடுக்கப்படுவதற்குக் காரணம் என்ன? ஒரே மாதிரியாக எல்லா ஆஸ்டல்களிலும் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—"எல்லோருக்கும் ரூ. 15 கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கத்தினர் சொல்வதைப் பற்றி நான் விசாரணை செய்கிறேன்."

SRI M. PALANIYANDI :—"சாதாரணமாக புது ஆஸ்டல்களை ஆரம்பிக்கும்போது தனிப்பட்டவர்கள் ஒரு வருஷம் தனியாகவே நடத்த வேண்டும் என்ற ஒரு சட்டம் இப்பொழுது இருக்கிறது. அப்படி இல்லாமல் கட்டடம் கட்டிக் கொடுத்தால் போதும் என்று விதியை அமைத்து கட்டடங்களை மட்டும் அமைத்துக் கொடுத்து விட்டால் அந்த ஆஸ்டலை அங்கீகாரம் செய்ய சர்க்கார் முன்வருமா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—"எங்கு பார்த்தாலும் ஆஸ்டல்கள் அநேகமாக ஆரம்பிக்கப்பட்டு வந்தன. ஆஸ்டல்களை வைத்துக் கொண்டு பணம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்துடன் சிலர் ஆஸ்டல்களை ஆரம்பித்தார்கள். இதைப் பற்றி 1951-ம் வருஷம் அரசாங்கத்திற்கு தகவல் வந்தது. அதன் பேரில் தான் குறைந்தது ஒரு வருஷமாவது ஆஸ்டல் வைத்து நடத்தினுல் தான் பிறகு அதற்கு அங்கீகாரம் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. இல்லா விட்டால் எங்கு பார்த்தாலும் ஆஸ்டல்களை ஆரம்பிப்பார்கள். ஒரு மாணவனுக்கு ரூ. 10 அல்லது 15 என்று கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் போதிய பணம் இல்லை."

SRI P. VENKATESHA SHOLAGAR :—"இப்பொழுது ஆஸ்டல்களுக்குக் கொடுக்கப்படும் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அது மாணவர்களுக்குப் போதுமானதாக இல்லை. அவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு போதுமான சத்துள்ளதாகவும் இல்லை. அதனுல் அவர்களை ஒரு நாளைக்கு அரை மணி அல்லது ஒரு மணி நேரம் தோட்டங்களில் வேலை செய்யச் சொன்னுல் அவர்களுக்கு வேண்டிய காய் கறிகளை உற்பத்தி

செய்வதற்கு பழக்கம் ஏற்படுவதோடு அவைகளையே சாப்பிடவும் வசதி ஏற்படுகிறது. அதனால் காய் கறிகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்வதோடு கமிட்டிகளும், மானேஜ்மெண்டுகளும் இந்த வேலையில் ஈடுபடுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்துவார்களா? அதற்கு வேண்டிய முயற்சியையும் மந்திரி அவர்கள் எடுத்துக் கொள்வார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" அநேக ஆஸ்டல்களில் இப்படி தோட்ட வேலைகள் செய்து வருகிறார்கள். அங்கு உற்பத்தியாகும் பொருள்களையும் அவர்கள் சமயலுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளுகிறார்கள். ரூ. 15 மாணவர்களுக்குக் கொடுப்பது அதிகமாக இருக்கிறது என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறது. அதைக் குறைக்கலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது."

SRI S. SWAYAMPRAKASAM :—" From the answers given by the Hon. Minister, it is found that 200 hostels are run by private individuals. May I know whether the Government have got figures as to how many of them are run by Harijans and how many of them are run by non-Harijans?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have no figures. The intention of the Government is to see that committees are constituted comprising both Harijans and non-Harijans and there will be six members in each committee, three to be nominated by the Government and three to be nominated by the management. I am not sure how many of these hostels are run by Harijans, but I think most of them are managed by non-Harijans."

9–20 a.m. SRI V. MUTHU :—" ஹரிஜன ஹாஸ்டல்கள் நல்ல முறையில் நடக்கவில்லை என்ற புகார்கள் வருகிறதாகத் தெரிகிறது. என்னென்ன புகார்கள் வருகின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்தால் அவர்கள் அந்த ஹாஸ்டல்களுக்கு விஜயம் செய்யும்போது அது மாதிரியான குறைகள் வரக்கூடாது எனச் சொல்லமுடியும். மதுரை ஜில்லாவில் ஹரிஜன சேவா சங்கத்தின் சார்பிலே 18 ஹாஸ்டல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை எல்லாம் நல்ல முறையில் நடந்து வருகின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" மதுரை ஜில்லாவில் இருக்கும் ஹாஸ்டல்கள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதும், மற்ற ஹாஸ்டல்களுக்கு அவை வழி காட்டியாகவும் இருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். எப்போதும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஹாஸ்டல்களுக்குச் சென்று பார்வையிட வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஹாஸ்டல்களிலுள்ள குறைபாடுகளைப் பரிசீலனை செய்து சர்க்காருக்கும் எடுத்துச் சொன்னால் அவற்றை நிவர்த்திக்க சர்க்காருக்குச் சௌகர்யமாக இருக்கும்."

Development Schemes in Coimbatore district

* 1628 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amounts allotted for Rural Development Schemes, Block Development Schemes and Community Project Schemes in Coimbatore district in 1953–54 ; and

(*b*) the amount spent for each item during the same year?